ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==========================================================================

# தொல்காப்பியச் செய்யுளியலில் பேராசிரியரின் திறனாய்வுப் பார்வை

*முனைவர் பா.கலையரசி*
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ்த்துறை, எஸ்.ஆர்.எம் திருச்சி கலை அறிவியல் கல்லூரி, திருச்சி - 621 105.*

==========================================================================

ஆய்வுச் சுருக்கம்

திறனாய்வு என்பது அறிவுக்கும் உயர்வுக்கும் இடங் கொடுத்து வளர்ந்து வரும் ஒரு அரிய கலை ஆகும். ஒரு பொருளின் திறனைப் பற்றி ஆராயும் இத்திறனாய்வுக் கலையில் ‘முடிவுக் கூறல்’ என்பது இன்றியமையாத இடத்தினைப் பெறுகிறது. இதனடிப்படையில், தொல்காப்பியச் சூத்திரங்களை அணுகும் போது பேராசிரியரின் உரை விளக்கம் சிறந்த இலக்கியத் திறனாய்வு நெறிகளைக் கொண்டிருப்பதை உணர இயலுகிறது. ஒரு கருத்தினை விளக்குவதற்காக திறனாய்வாளர்கள் மேற்கொள்ளும் அணுகுமுறைகளை பேராசிரியர் தமது உரையில் கையாண்டுள்ள முறைமையையும், திறனாய்வின் நோக்கமான படைப்பிற்கான உண்மையைக் காட்டுதலை செய்யுளியல் நூற்பாக்களில் பேராசிரியர் எடுத்துரைத்துள்ள தனித்தன்மையையும் நுண்ணிதின் ஆராய்வதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## முன்னுரை

காலத்தால் முற்பட்ட இலக்கியக் கொள்கைகளையும், திறனாய்வு முறைகளையும் அறிந்து கொள்வதற்கு பேராசிரியரின் உரை சிறந்ததொரு ஊன்றுகோலாக அமைந்துள்ளது. இலக்கியக் கொள்கைகள், இலக்கியத் திறனாய்வு, இலக்கிய வரலாறு ஆகியவற்றைத் தனித்தனியே பெயர்க் கூறி பேராசிரியர் விளக்கவில்லை என்றாலும், இவரின் உரையில் அவை பற்றிய அடிப்படையான உண்மைகள் மறைந்திருப்பதை விளக்கமுறைத் திறனாய்வு முறையில் இக்கட்டுரை ஆராய்ந்து விளக்குகிறது.

## நேர்பு நிரைபு எண்ணிக்கை

நேரசை நான்கு, நிரையசை நான்கு என்பது தொல்காப்பியர் முதலான யாப்பியலார் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தாகும். ஆனால், தொல்காப்பியத்தில் நேர்பு, நிரைபசைகளின் எண்ணிக்கையைக் கூறுவதில் உரையாசிரியர்கள் தங்களுக்கென தனித்ததொரு கருத்தினைக் கொண்டுள்ளனர்.

“இருவகை யுகரமோ டியைந்தவை வரினே
நேர்பு நிரைபு மாகு மென்ப”[1]

என வரும் நூற்பாவிற்கு இதனையடுத்து வரும்

“குறிலிணை யுகர மல்வழி யான”[2]

என்ற நூற்பாவினையும் கருத்தில் கொண்டால் தனிக் குறிலாகிய நேரசையின் பின்னர் இருவகை உகரமும் வந்து நேர்பசையாதல் இல்லை என்பது புலனாகிறது. எனவே, நேர்பசை ஆறு, நிரைபசை எட்டு என வரும். இக்கருத்தினையே இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தமது உரைத் திறத்தால் வியங்க வைப்பர். ஆனால், பேராசிரியர் நேர்பு,நிரைபசைகளின் பின்னர்வரும் ஒருசொல் விழுக்காடுபட இயைந்து வர வேண்டுமென்கிறார். அதாவது, நேரசை பின்னரும், நிரையசை நான்கின் பின்னரும் இருவகை உகரமும் வந்து பிறக்கும் நேர்பு,

நிரைபசைகளின் பின்னர் வரும் உகரத்தைக் கருத்திற் கொண்டு திறனாய்வுச் செய்துள்ளார் பேராசிரியர்.

எனவே, குற்றுகர ஈற்றால் பிறந்த நேர்பசை மூன்றும், முற்றுகர ஈற்றால் பிறந்த நேர்பசை இரண்டுமாக நேர்பசை ஐந்தாகவும், குற்றுகர ஈற்றால் பிறந்த நிரைபசை நான்கும், முற்றுகர ஈற்றால் பிறந்த நிரைபசை இரண்டுமாக நிரைபசையின் விரி ஆறாகவும் பேராசிரியரால் பகுக்கப்பட்டுள்ளது. இங்ஙனமாக, சூத்திரத்தில் பொதிந்து கிடக்கும் உண்மைப் பொருளின் தெளிவை இலக்கண உலகிற்கு அறிமுகப்படுத்தும் திறனாய்வுப் பணியைச் செவ்விதின் மேற்கொண்டுள்ளார் பேராசிரியர் என்பதற்கு ஆதாரமாய் இச்சூத்திர உரை விளங்குகிறது.

ஒற்றடுத்து நிற்கும் உரியசை

நேர்பு, நிரைபு என்ற இவ்விரு அசைகளும் உரியசைகள் ஆகும்.

"குற்றிய லுகரமு முற்றிய லுகரமு
மொற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே"[3]

எனும் சூத்திரம் வருமொழியில் வல்லெழுத்து வரும்போது ஒற்றொடு தோன்றி நிற்றலும் உரியசைக்கு உரியது என விளக்குகிறது. இதற்கு உரை கூறிய இளம்பூரணர்,

"இருவகை யுகரமும் ஒற்றொடு தோன்றித் தனியசையாகி நிற்கவும்
பெறுமென்றவாறு"[4]

என்ற கருத்தினைக் கூறி, வேண்டும், கண்ணும் என வரும் சொற்களைச் சான்றாகக் காட்டுவார். சூத்திரம் "நிற்கவும்" என மொழிந்திருப்பதால் உம்மை எதிர்மறையாயிற்று. எனவே, இளம்பூரணரின் கருத்தும், சான்றுகளும் இச்சூத்திரத்திற்கு சற்றும் பொருத்தமில்லாததாய் அமைந்துள்ளது. ஆனால், நூலாசிரியனின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளுதலும், புரிய வைத்தலும் என்ற உயரிய கொள்கையினை இவ்விடத்து கடைபிடித்த பேராசிரியர்,

"இங்ஙனம் வருமொழியொற்று மிகின் அவை கொண்டு நேர்பும் நிரைபுமாமெனவே உண்ணும் எனவும் நடக்கும் எனவும் நிலைமொழி ஒற்று நின்றவழித் தேமாவும் புளிமாவுமா வதல்லது நேர்பசையும் நிரைபசையுமாகாதென்பதாம்"[5]

என்று முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் உரை யாத்துள்ளார். பேராசிரியரின் இவ்விளக்கம் இளம்பூரணரின் கருத்தை செவ்விய முறையில் மறுத்தும் நிற்கிறது. உண்ணும், நடக்கும் என்று நிலைமொழி ஒற்றுப் பெற்றால் ஈரசைகளாகக் கொள்ள வேண்டும் என்றும், சேற்றுக்கால் நாணுத்தளை என்று வருமொழி ஒற்றுப் பெற்றால் அதனை ஓரசைகளாகக் கொள்ள வேண்டும் என்றும் விளக்கும் பேராசிரியரின் இச்சூத்திர உரை திறனாய்வாளர்கள் பெற்றிருக்க வேண்டிய அடிப்படைத் தகுதிகளுள் ஒன்றான முடிவுகளை எடுத்துரைக்கும் மனப்பாங்கினை நினைவுபடுத்துவதாய் அமைந்துள்ளது.

சீர்களின் முறைவைப்பு

சீர்கள் அனைத்தையும் வகைப்படுத்தி வாய்பாடு கூறினால் அச்சீர்கள் ஒரே வகைமுறையில் கூறப்படுதல் இல்லை என்பது
புலப்படும்.

"இயலசை மயக்க மியற்சீ ரேனை
யுரியசை மயக்க மாசிரிய வுரிச்சீர்"[6]

என்ற நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் ,

"மயக்கம் என்றது தம்மொடு தாம் மயங்குதலும் தம்மொடு பிறிது மயங்குதலுமாம்"[7]

என்று விளக்கமளித்துள்ளார். அஃதாவது, நேர்நேர், நிரைநேர், நேர்நிரை,
நிரைநிரை என வரும் முறைவைப்பைக் குறிப்பிடுகிறார். நச்சினார்க்கினியர் இம்முறையில் சீர்களைச் சுட்டுதல் எளிமையானதாக அமைந்துள்ளது.

நேர் நேர் நேர்
நிரை நேர் நேர்
நேர் நிரை நேர்
நிரை நிரை நேர்
நேர் நேர் நிரை
நிரை நேர் நிரை
நேர் நிரை நிரை

நிரை நிரை நிரை

என அமையும் இம்முறை வைப்பில் முதலசைகளில் அடுத்தடுத்து நேர்நிரை என்னும் முறை வைப்பும், இரண்டாம் அசைகளில் ஈரடிகளுக்கு ஒருமுறை நேர்நிரை என்னும் முறை வைப்பும், மூன்றாம் அசைகளில் நான்கடிகளுக்கு முறை நேர்நிரை என்ற முறை வைப்பும் முறையாக அமைந்து ஒழுங்குபட விளங்குகின்றன. இவ்வமைப்பின் வரையறை நினைவு கொள்வதற்கு ஏதுவாக அமைந்திருப்பினும் பேராசிரியர் சுட்டும் முறை வைப்பே பெரும்பான்மை வழக்குடையதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பாக்கள் இயலும் திறம்

ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா என நான்காகப் பிரித்துக் கூறப்படும் இப்பாக்களில் வஞ்சியை ஆசிரியப்பாவிலும், கலியை வெண்பாவிலும் அடக்கி அவற்றையும் இரண்டாக வழங்கும் ஒரு முறையைத் தொல்காப்பியர்,

“ஆசிரிய நடைத்தே வஞ்சி யேனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப”[8]

என்ற சூத்திரத்தில் விளக்குகிறார். இச்சூத்திரத்தில் குறிப்பிடப்படும் “நடைத்தே” என்பது பாக்கள் இயலும் திறத்தையே குறிக்கும். வஞ்சிப்பா ஆசிரியப்பா போன்ற நடையை உடையது என்றும், கலிப்பா வெண்பாவினைப் போன்ற நடையைக் கொண்டது என்றும் கூறுவார் இளம்பூரணர். இப்பகுதிக்கு உரை கூறிய பேராசிரியர்,

“ஆசிரியத்து விகற்பமாகித் தூங்கலோசை விரிந்தடங்கும் வெண்பாவின் விகற்பமாகிக் கலிப்பா விரிந்தடங்கும்”[9]

என்று பொருளுரைத்து,

“வீடுபேறு மிகவிழைந்து, நீடுநினைந்து நெடிதிருந்து என சீரான் வஞ்சித்
தூக்குப் பிறந்தது”[10]

என்றும்,

“மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய் என வெண்பாவினுட்
கலிப்பா பிறந்தது”[11]

என்றும் விளக்கியுள்ளார். அஃதாவது, வீடுபேறு மிகவிழைந்து, நீடுநினைந்து நெடிதிருந்து என வரும் ஆசிரிய அடிகளில் இரண்டிரண்டு சீர்களாகச் சேர்த்தால் அது குறளடி வஞ்சிப் பாவாக மாறுகிறது. இதனையே அகவற்சீரில் வஞ்சித் தூக்குப் பிறந்தது என்று கூறியுள்ளார். அதே போன்று, ‘மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய்’ என்ற வாய்ப்பாட்டில் பிறக்கும் வெண்பாவுரிச்சீர் கலிப்பாவிலும் பயின்று வரும் என்பதையே “வெண்பாவினுட் கலிப்பா பிறந்தது” என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்விளக்கத்தை கூர்ந்து ஆராய்ந்தால் இளம்பூரணர் அளிக்கும் விளக்கத்தை விட பேராசிரியரின் கருத்து மிகுந்த தெளிவினை ஏற்படுத்துவதாக அமைவதை அறிய இயலுகிறது. திறனாய்வாளர்கள் தங்களுடைய பணிகளுள் தலையாய பணியாகக் கருதியதே இப்பொருள் தெளிவுறக் காட்டுதலையே யாகும். சூத்திரத்தின் பொருளைத் தெளிவுறக் காட்டும் கோட்பாட்டின் அடிப்படையில் பேராசிரியரின் இவ்விளக்கத்தை அணுகும் போது அவர்தம் கருத்து நுட்பமும், திறனாய்வின் சிறப்பும் வெளிப்படுகிறது.

மேலும், நாற்சீர் கலியடியை இருசீர்; வஞ்சி அடிகளாகப் பிரித்து வஞ்சிப்பாவிலும் கலிப்பா பிறக்கும் என்ற கருத்து குறித்து ஐயம் எழும்போது, இக்கருத்து அறவே பொருந்தாது என்பதற்கும் பேராசிரியர் உரையில் திறனாய்வின் அடிப்படையில் பொருத்தமான விடை கிடைக்கிறது. இவ்வகை ஐயத்தைக் கருத்தில் கொண்டு,

“ஒன்று ஒன்றனொடு ஒக்குங்காற் பிறப்பித்ததனோடு பிறந்ததொப்ப வேண்டும்”[12]

என்று தெளிவுற பதிலுரைக்கிறார் பேராசிரியர். எனவே, ஆசிரியச் சீர்கள் வஞ்சிப்பாவில் பெருமளவும், வெண்பா உரிச்சீர்கள் கலிப்பாவினுள் பெருமளவும் விளங்குவதே நான்கு வகையானப் பாக்களைத் தொல்காப்பியர் இரண்டாக அடக்கிக் கூறுவதற்குரிய முக்கியக் காரணமென்பது பேராசிரியரின் தெளிந்த உரையால் புலனாகிறது.

*கைக்கிளைச் செய்யுள்*

*'கை' என்பது சிறுமையையும் 'கிளை' என்பது உறவையும் குறிக்கும். அஃதாவது, பெருமையில்லாத தலைமக்களின் சிறுமை உறவைக் குறிப்பதே கைக்கிளை ஆகும். கைக்கிளை என்பது தமிழிலக்கியத்தில் அகத்திலும், புறத்திலும் பலவிடங்களில் பயின்று வந்துள்ளது. கைக்கிளைக்கு உரிய பொருண்மைகளான காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் என்ற துறைகள் பயின்று வரும் அகப்புறக் கைக்கிளையை 'கைக்கிளை வெண்பா' எனவும் சுட்டலாம். ஆனால், கைக்கிளை வெண்பாவை விளக்கும் சூத்திரம்,*

*"கைக்கிளை தானே வெண்பா வாகி*
*யாசிரிய வியலான் முடியவும் பெறுமே"[13]*

*என அமைந்துள்ளது. இதற்கு உரை கூறும் இளம்பூரணர்,*

*"கைக்கிளைப் பொருண்மை வெண்பாவினான் வருதலின்றி முதலிரண்டடியும் வெண்பாவாகிக் கடையிரண்டடியும் ஆசிரியமாகி இருபாவினாலும் வரும்"[14]*

*என்று கூறி, அவ்வாறு வருவதனை மருட்பாவென்றும் விளக்கமளித்துள்ளார். கைக்கிளைப் பொருண்மை வெண்பாவாக வருவதும், மருட்பாவாக வருவதும் என இரண்டு வகையாகக் கொள்ளப்படும் என்பது தொல்காப்பியர் கருத்தென இளம்பூரணர் குறிப்பிட்டுள்ளார்.*

*இதனால், வெண்பாவானது பிற பொருள்களில் வரும் தன்மையைப் போல் கைக்கிளைப் பொருளிலும் வரும். ஆனால், மருட்பாவானது கைக்கிளைப் பொருளில் மட்டுமே வரும் என்பது உறுதியாகிறது. பேராசிரியரின் கைக்கிளைச் செய்யுள் குறித்த விளக்கம் அது பயின்று வரும் பா வகையின் அடிப்படையை திறனாய்வு செய்கிறது. மூலநூல் ஆசிரியரின் கருத்தை முதலில் தானறிவதும், அக்கருத்தின் சிறப்பைத் தனியே பிரிப்பதும், பிரித்ததை வகைப்படுத்திக் கூறுவதும் ஆகிய இம்மூன்று பணிகளும் திறனாய்வாளர்களின் முக்கியமானக் கடமைகள் ஆகும்.*

*இக்கடமைகளைப் பேராசிரியர் ஆற்றிய விதம் அவர்தம் உரையால் இச்சூத்திர விளக்கத்தில் காணவியலுகிறது. ஏனைனில், இச்சூத்திரத்திற்கு உரையெழுதிய பேராசிரியர் இதன் விளக்கத்தில் அதன் சிறப்பையும், பின்வரும் கலிவெண்பாட்டு குறித்த சூத்திரத்தில் அதன் துல்லியமான வரையறையை விரித்துங் கூறியுள்ளார்.*

*"கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்"[15]*

*என்ற நூற்பா உரையில்,*

*"ஈண்டோதிய கலிவெண்பாட்டு மொழிந்த கைக்கிளைப் பொருண்மேல்*
*வாராவோ வெனின், வருமென்பது"[16]*

*எனக் குறிப்பிட்டுள்ளார். இவ்விளக்கத்தால் கலிவெண்பாட்டிலும் கைக்கிளைப் பொருண்மை சிறுபான்மை பாடப்பெறும் என்ற உண்மைப் புலனாகிறது. மேலும், கைக்கிளைப் பொருண்மை எஞ்சி நிற்கும் கலிப்பாவிலும், வஞ்சிப்பாவிலும் வராது என்பதனை,*

*"கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ"[17]*

*என்ற தொடரால் அறியலாம். இத்தொடர் புறநிலை வாழ்த்துப் பாவகையைக் குறிப்பிடுவது என்றாலும் பேராசிரியரின் குறிப்பால் இதனை பொருண்மைக்கும் உரியதாகக் கொள்ளுதல் அவசியமான ஒன்றாகும்.*

*முடிவுரை*

*திறனாய்வு முறையில் நூற்பாக்களுக்கு விளக்கந்தரும் பேராசிரியர் மூலநூலில் புலமை, பல்துறைச் செய்திகளையும் அறிந்து வைத்திருக்கும் ஆற்றல், மூலநூல் உரைக்கும் மெய்ம்மையை மெய்ப்பித்தல், முடிவுகளைத் துணிந்து சொல்லக் கூடிய மனப் பக்குவம், இலக்கியப் பயிற்சி மற்றும் அதன் சுவையை அறிந்திருத்தல், புதிய கருத்துக்களைச் சொல்லக் கூடிய அளவிற்கு தெளிந்த அறிவு, நுட்பமாக எதையும் உணர்ந்து கொண்டு உணர்த்தும் திறன் என்ற இவ்வனைத்து திறனாய்வாளர்களுக்கான அடிப்படைத் தகுதிகளையும் உடையவராக தன் உரையின் வாயிலாக ஒவ்வொரு சூத்திரத்திலும் வெளிப்படுகிறார்.*

*சான்றெண் விளக்கம்*

*1) கணேசையர் (ப.ஆ), தொல்காகப்பியம், பொருளதிகார மூலமும் பேராசிரியருரையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, நூற்பா எண் -316*
*2) மேலது, நூற்பா எண் - 317*

3) மேலது, நூற்பா எண் - 322
4) இளம்பூரணர் (உ.ஆ), தொல்காகப்பியம், பொருளதிகாரம் பகுதி-3, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, பக்க எண் - 399
5) கணேசையர் (ப.ஆ), தொல்காகப்பியம், பொருளதிகார மூலமும் பேராசிரியருரையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பக்க எண் - 322
6) மேலது, நூற்பா எண் - 325
7) கு.சுந்தர மூர்த்தி (உ.ஆ), தொல்காகப்பியம், பொருளதிகாரம் - செய்யுளியல், நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு, சென்னை, பக்க எண் - 17
8) கணேசையர் (ப.ஆ), தொல்காகப்பியம், பொருளதிகார மூலமும் பேராசிரியருரையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, நூற்பா எண் - 420
9) மேலது, பக்க எண் – 438
10) மேலது, பக்க எண் - 438
11) மேலது, பக்க எண் - 438
12) மேலது, பக்க எண் - 438
13) மேலது, பக்க எண் - 431
14) இளம்பூரணர் (உ.ஆ), தொல்காகப்பியம், பொருளதிகாரம் பகுதி-3, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, பக்க எண் - 454
15) கணேசையர் (ப.ஆ), தொல்காகப்பியம், பொருளதிகார மூலமும் பேராசிரியருரையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, நூற்பா எண் - 472
16) மேலது, பக்க எண் - 549
17) மேலது, பக்க எண் – 549

********* ********* ********** ********* ********* ********** ********** **********